1978 செப்டம்பர் 7]

மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி): அவை முன் உள்ள பிரச்சினை:

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியின்படி 1978-79 ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை, மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கக்கூடிய நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி): ஒற்றை மாற்று வாக்குமுறை மூலம், விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்க, தேர்தல்களை நடத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின் 2(1) ஒழுங்கு முறை விதிக்கிணங்க, 1978-79 ஆம் நிதியாண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. அதற்கு மாண்புமிகு தலைவர் அவர்களால் கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரல் வரையறுக்கப்பட்டுள்ளது.

வேட்பு மனுக்கள் பெற்றுக் கொள்வதற்கான நாளும், நேரமும்—9-9-1978 மாலை 5 மணி.

வேட்பு மனுக்களைச் சரிபார்ப்பதற்கான நாளும், நேரமும்—9-9-1978 மாலை 6 மணி.

வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான நாளும், நேரமும்—11-9-1978 மாலை 5 மணி.

வேட்பு மனுக்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை ஒன்பது பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் ஏதுமிருப்பின் வாக்குப் பதிவு நடைபெறும் நாளும் நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

(2) அவைக்குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு க. இராசா முகமது: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியை யொட்டி 1978-79 ஆம் நிதியாண்டுக்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்"

என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) : அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியையொட்டி, 1978-79 ஆம் நிதியாண்டுக்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை, மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) : ஒற்றை மாற்று வாக்கு மூலம், விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்க, தேர்தல்களை நடத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின் 2 (1) ஒழுங்குமுறை விதிக்கிணங்க, 1978-79 ஆம் நிதியாண்டிற்கான அவைக் குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. அதற்கு மாண்புமிகு தலைவர் அவர்களால் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் வரையறுக்கப்பட்டுள்ளது :—

வேட்பு மனுக்கள் வரப்பெறுவதற்கான நாளும் நேரமும்—9-9-1978 மாலை 5 மணி.

வேட்பு மனுக்கள் சரிபார்ப்பதற்கான நாளும் நேரமும்—9-9-1978 மாலை 6 மணி.

வேட்பு மனுக்களைத் திருப்பிப் பெறுவதற்கான நாளும் நேரமும்—11-9-1978 மாலை 5 மணி.

வேட்பு மனுக்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை ஆறு பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் ஏதுமிருப்பின், வாக்குப் பதிவு நடைபெறும் நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS